**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.82/2022 |
| Deposition of Witness for | : | PW– 4 |
| Name and Age | : | திரு. கண்ணையன் (வயது 62) |
| Father / Husband Name | : | கோவிந்தபெருமாள் |
| Occupation | : | காவல் துணை கண்காணிப்பாளர் ஓய்வு |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |

**நாள்** – 24.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் காவல் துணை கண்காணிப்பாளராக பணி செய்து பணி ஓய்வு பெற்ற தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2017–ஆம் வருடம் மாரண்டஹள்ளி காவல்நிலைய வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது 09.10.2017–ம் தேதி மகேந்திர மங்கலம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது யுவராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.187/2017 சட்டபிரிவுகள் 279, 337 இதச– ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காயம்பட்ட மலையன்(எ)ரங்கநாதன் மற்றும் மாட்டுக்காரன்(எ)முனியப்பன் ஆகியோரை பாலக்கோடு அரசு மருத்துவமனை சென்று வாக்குமூலம் பதிவு செய்ய சென்றுள்ளார். இவ்வழக்கில் மேல்சிகிச்சைக்காக ஓசூர் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லும் போது பெரியதப்பை அருகே மாட்டுக்காரன்(எ)முனியப்பன் என்பவர் இறந்துவிட்டதாகவும் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு எடுத்து வருவதாக தகவல் தெரிந்தும் நிலையம் வந்தபோது பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மலையன் (எ) ரங்கநாதன் என்பவபர் அன்றைய தினம் 17.48மணிக்கு இறந்துவிட்டதாக பாலக்கோடு அரசு மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு தகவல் பெறப்பட்டிருந்ததாகவும் இதன்பின்னிட்டு இவ்வழக்கின் சட்டப்பிரிவான 279, 337 இதச–வில் இருந்து 279,

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:08:36 +0530

304(A) இதச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் இரவு சாலை விபத்து சம்பவத்தை சொல்லி வழக்கு கோப்பை என்னிடம் ஒப்படைத்தார். இரவு நேரம் ஆனதால் இவ்வழக்கில் புலன்விசாரணை மேற்கொள்ள இயலாத காரணத்தினால் 10.10.2017ம் தேதி காலை 06.00மணிக்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகளான விஜயகுமார் மற்றும் செந்தில் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடமான ஜிட்டாண்டஹள்ளி பேருந்து நிறுத்தம் அருகே சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் பாலக்கோடு அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்து போன மாட்டுக்காரன்(எ)முனியப்பன் என்பவரின் பிரேதத்தை உதவி ஆய்வாளர் பெருமாள் என்பவரை பிரேத விசாரணை மேற்கொள்ள அறிவுறுத்தி கடிதம் கொடுத்து அனுப்பினேன். மேற்படி சவக்கிடங்கில் இறந்துபோன மலையன்(எ)ரங்கநாதன் என்பவரது பிரேதத்தின் மீது நான் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 09.00 முதல் 11.00 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6–ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அதே போல் காவல் உதவி ஆய்வாளர் பெருமாள் மாட்டுக்காரன்(எ)முனியப்பன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் 09.00 முதல் 11.00 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7–ஆக குறியிடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான முரளி, மாயக்கண்ணன், சீனிவாசன், சண்முகம், கோவிந்தராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே போல் காவல் உதவி ஆய்வாளர் யுவராஜ் மகேந்திரன், கமலநாதன், ராஜேஸ், மேச்சேரி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தார். பிரேத விசாரணை முடித்து ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தை தலைமை காவலர் வெங்கடேசன் மூலமாகவும் முனியப்பன் பிரேதத்தை தலைமை காவலர் செல்வம் மூலமாகவும் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு அரசு மருத்துவர் பாலக்கோடு அரசு மருத்துவமனை அவர்களுக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டு கோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். பின்பு எதிரியை தேடிய நிலையில் எதிரி தலைமறைவாக இருந்து 13.10.2017ம் தேதி கனம் நீதிமன்றத்தில் சரணடைந்து முன்பினை பெற்றிருந்தார். இவ்வழக்கில் புலன்விசாரணையாக புகார்தாரர் யுவராஜ், சிவன், காவேரி ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின் இவ்வழக்கில் என்னுடைய உத்தரவின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் பெருமாள் அவர்கள் விபத்திற்குள்ளான வாகனங்களான TN 29 T 6571 Super XL வாகனத்தை 07.11.2017ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வு செய்து அறிக்கை வழங்க வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தார். அதே போல் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனம் TN 52 Y 0456 ஈச்சர் வாகனத்தை விபத்திற்கான

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:08:41 +0530

காரணம் அறியும் பொருட்டு 04.04.2018ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு ஆய்விற்காக அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் 23.05.2018ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அன்புசெழியன் அவர்களிடம் சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **TN 29 T 6571 Super XL வாகனத்திற்கான மோட்டார் வாகன அறிக்கை அ.சா.ஆ.8–ஆகவும் மற்றும் TN 52 Y 0456 ஈச்சர் வாகனத்திற்கான ஆய்வறிக்கை அ.சா.ஆ.9–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே போல் அன்றைய தினமே பாலக்கோடு அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் நந்தினி என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கைகளை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாட்டுக்காரன்(எ)முனியப்பன் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10–ஆகவும் மற்றும் ரங்கநாதன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11–ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு காவலர்கள் வெங்கடேசன், செல்வம், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குமார், உதவி ஆய்வாளர் பெருமாள் ஆகியோர்களை விசாரித்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சியங்களின் அடிப்படையில் எதிரி மீது 23.05.2018ம் தேதி இதச பிரிவுகள் 279, 304(A)–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு புகார்தாரர் ரங்கநாதனின் உறவினர் என்றால் சரிதான். புகார்தாரரே புகாரை எழுதினாரா என்றால் எழுத்துமூலமான புகாரை கொடுத்தார் யார் எழுதினார்கள் என தெரியாது. புகார்தாரருடன் உடன் சிலர் புகார் அளிக்கும்போது வந்தனர். புகாரை பெற்று முதன்மை விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் ஜிட்டாண்டஹள்ளியில் பூசா கடை மற்றும் தக்காளி மண்டி வைத்துள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் தனது வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது அவரது கடையில் இருந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக புகார்தாரர் யுவராஜை விசாரித்துள்ளேன். அவரை தவிர வேறு சாட்சிகளை விசாரித்துள்ளேனா என்றால் சிவன் மற்றும் காவேரி என்பவரை விசாரித்துள்ளேன். விபத்தில் இறந்தவர்கள் பாலக்கோடு நோக்கி செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக தெரிந்தது. விபத்தில் இறந்தவர்கள் ஜிட்டாண்டஅள்ளி செல்ல தான் சம்பவ சாலையில் பயணித்தவர்கள் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர்கள் ஜிட்டாண்டஹள்ளியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி ராயக்கோட்டையில் இருந்து பாலக்கோடு நோக்கி பயணித்தார் என்றால் சரிதான். ராயக்கோட்டையில் இருந்து பாலக்கோடு செல்லும் சாலையில் வலது திசையில் ஜிட்டாண்டஹள்ளி பிரிவு சாலையை தாண்டி தான் சம்பவ இடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் அருகில் கடைகள் மற்றும் ஆள்நடமாட்டம் இருக்கும் இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மூர்த்தி என்பவரது கடை இல்லை என்றால் நினைவில்லை. மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கடை உரிமையாளர் ராமரை விசாரிக்கவில்லை என்றால் சாட்சியம் அளிக்க முன்வராததால் விசாரிக்கவில்லை. மேற்படி விபரத்தை முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியின்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:08:47 +0530

வாகனத்திற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சேதம் 2 மற்றும் 3 வாகனத்தின் வலது திசையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த மலையன் என்பவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சேதம் 6 மற்றும் 7 வாகனத்தின் வலது திசையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மலையன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். பொதுவாக இருசக்கர வாகனத்தில் பயணிக்கும்போது சாலையின் வலது பக்கம் கடந்து செல்ல எத்தணிக்கும்போது சாலையின் போக்குவரத்தை கவனித்து தான் சாலையை கடக்கவேண்டும் என்றால் சரிதான். மலையன் சாலையின் போக்குவரத்தை கவனிக்காமல் சாலையின் வலதுபக்கம் கடக்கும்போது தான் எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. ஜிட்டாண்டஹள்ளி ஊருக்கு செல்ல பிரிவு சாலையில் வளையும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், சம்பவ இடத்தை பிரிவு சாலையை கடந்து காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை புகார்தாரர் அடையாளம் காட்டினார். விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. இழப்பீடு பெற கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் மீது சரிவர புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:08:53 +0530

Judicial Magistrate,
Palacode.